# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2021/2 - 2017 මැයි මස 29 වැනි සඳුදා - 2017.05.29

*2021/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், தெஹிவளை- கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைக்குள்ளான கீழே விபரிக்கப்பட்ட காணியினை இன்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா. உ),
பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள், "சுஹுறுபாய",
பத்தரமுல்லை,
*2017, மே 24.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு, தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையுள்ளான கல்கிஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ளதும், காணித்துண்டு இல. *1* என வரைபடத்தில் குறிக்கப்பட்டதும், "கல்கிஸ்ஸவத்த" என்றழைக்கப்படும் காணியானது பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளர் திரு. எம். டபிள்யூ. எல். ஐ. ஐ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்டு, பூர்வாங்க மாதிரிப்பட இல. *1202* என காட்டப்பட்டுள்ளது. வடக்கில் : எஸ். பி. வீரசிங்க என்பவரின் ஆதனம் மற்றும் இ. போ. ச. பஸ் நிலையத்தையும் ; கிழக்கில் : காலி வீதியினையும் ; தெற்கில் : புகையிரத பாதையையும் மற்றும் மேற்கில் : கற்கட்டிடத்தையும் எல்லைகளாக கொண்டுள்ளதுடன் *0. 3760* ஹெக்டெயர் விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.

*6- 430*


1A - G 25628 —10 (2017/05)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*